242

/ உண்மை நகல் /

☎ 0422- 2456911
*E-Mail* dfocbe@tn.nic.in

தமிழ்நாடு வனத்துறை

அனுப்புநர்
திரு. வே.திருநாவுக்கரசு, இ.வ.ப
மாவட்ட வன அலுவலர்,
கோவைக் கோட்டம்
கோவை -641 043

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்
மற்றும் வனத்துறைத் தலைவர்
சென்னை - 15
வனப்பாதுகாவலர்
கோவை மண்டலம், கோவை மூலமாக

**ந.க.எண்: வ1/8120/2011 நாள் :17.08.2012**

ஐயா,

பொருள் : மலைதல பாதுகாப்பு குழுமம் (HACA) - கோவை வனக்கோட்டம்- கோவை மாவட்டம்- கோவை தெற்கு வட்டம் - போலாம்பட்டி வனச்சரகம் - இக்கரை போளுவாம்பட்டி கிராமம - புல எண்கள் 48/2-59,77/1,78,84,86,101/3C,1077/1A,A1 மற்றும் 1079/1A ஆகியவற்றில் ஈஷா அறக்கட்டளையினர் கட்டிடங்கள் கட்டியது மற்றும் கட்டி வருவது-மலைதல பாதுகாப்பு குழுமத்தின் அனுமதி பெற வனத்துறையின் தடையின்மை சான்று கோருதல் - தொடர்பாக

பார்வை : முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை ந.க.எண டிஎஸ் 4/31841/2011 நாள் 09.07.2011

பிறகு

கோவை வனக்கோட்டம்,கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம், இக்கரை போளுவாம்பட்டி கிராமம் - புல எண்கள் 48/2-59,77/1,78,84,86,101/3C,1077/1A.A1 மற்றும் 1079/1A ஐச் சார்ந்த 42.77 எக்டர் நிலப்பரப்பில் ஈஷா அறக்கட்டளையினரால் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள 63380 ச.மீ பரப்பளவு கட்டிடங்களுக்கும், கட்ட உத்தேசிப்பதாக ஈஷா அறக்கட்டளையினரால் விண்ணப்பம் மட்டும் அளிததுவிட்டு கட்டப்பட்டு வரும் 28582.52 ச.மீ பரப்பளவு கட்டிடங்களுக்கும் மலைதல பாதுகாப்பு குழுமத்தின் அனுமதி பெறும்பொருட்டு வனத்துறையின் தடையின்மை சான்று கோரி ஈஷா அறக்கட்டளையினர் அவர்களது 06.07.2011 ந் தேதிய கடித வாயிலாக விண்ணப்பித்துள்ளனர். வனத்துறையின் தடையின்மை சான்று கோரப்பட்டுள்ள புலங்கள அமைந்துள்ள இக்கரை போளுவாம்பட்டி கிராமம் அரசாணை எண் 49 வீட்டுவசதி (மற்றும்) நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 24.03.2003ன் படி மலைதலப் பகுதியில் அமைந்துள்ளதால் மலைதல பாதுகாப்பு குழும விதிப்படி வனத்துறையின் கருததுருவை குழுமத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது.

3) மேற்படி இடததினை 16.02.2012-ந் தேதி அன்று மாவட்ட வன அலுவலர், கோவையால களத்தணிக்கை செய்யப்பட்டது. இந்நேர்வு தொடர்பாக கீழ்கண்ட குறிப்புரைகள் அளிக்கப்படுகிறது.

அ) புல எண்கள் 48/1, 48/2, 49, 50/1 ,50/2A ,50/2B ,50/2C ,50/2D ,50/3A, 50/3B,50/3C,50/3D,50/4A,50/4B,51/1,51/2A,51/2B,51/3,51/4A,51/4B,51/4C,52/1A,52/1B, 52/1C,52/2A,52/2B,52/2C,53/1A,53/1B,54/1,54/2,55/1A,55/1B,56,57,58/2A,58/2B,58/3,59, 77/1,78/1,78/2A,78/3,84,85/1,85/2,86/1,86/2,101/3C,1077/1A1A,1077/8,1079/1A-ஐ சார்ந்த 52 புலங்களின் பரப்பான 42.77 எக்டரில் 1994ம் வருடம் முதல் கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் கட்டப்பட்டு வரும் கட்டிடங்கள் குறித்த விபரம் பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண் | பயன்பாட்டின் விபரம் | வருடம் | பரப்பளவு (சதுர மீட்டரில்) |
|---|---|---|---|
| 1 | கட்டிடங்கள் | 1994 | 2913.34 |
| 2 | கட்டிடங்கள் | 1998 | 8604.63 |
| 3 | கட்டிடங்கள் | 2000 | 1448.03 |
| 4 | கட்டிடங்கள் | 2001 | 8590.46 |
| 5 | கட்டிடங்கள் | 2002 | 7589.93 |
| 6 | கட்டிடங்கள் | 2005 | 8277.93 |
| 7 | கட்டிடங்கள் | 2006 | 212.28 |
| 8 | கட்டிடங்கள் | 2007 | 5259.07 |
| 9 | கட்டிடங்கள் | 2008 | 6148.83 |
| 10 | கட்டிடங்கள் | 2009 | 5478.60 |
| 11 | கட்டிடங்கள் | 2010 | 8856.90 |
| 12 | குளம் | 2010 | 1406.62 |
| 13 | தற்பொழுது கட்டப்பட்டு வரும் கட்டிடங்கள் | – | 28582.52 |
| 14 | நடைபாதை , அலங்கார தோட்டம், பொருட்கள் சேகரிப்பு பகுதி, வாகனங்கள் நிறுத்துமிடம், விளையாட்டு மைதானம், பாக்குத் தோப்பு, தீர்த்தத் குண்டம் | – | 334330.86 |
| | ஆக மொத்தம் | | 4,27,700.00 |

ஆ) 1994 முதல 2011 முடிய 63380 சதுர மீட்டர் கட்டிடங்களும், 1406.62 சதுர மீட்டர் குளமும் ஈஷா அறக்கட்டளையினரால் கட்டப்பட்டுள்ளது. இவற்றில் கீழ்கண்ட வருடங்களில் கட்டப்பட்ட 32855.80 சதுர மீட்டர் கட்டிடங்களுக்கு மட்டும் ஊராட்சியின் அனுமதி பெற்றுள்ளதாக ஈஷா அறக்கட்டளையினரால் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. (நகல் இத்துடன் அடக்கம்) அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | கட்டிடம் கட்டப்பட்ட வருடம் | | பரப்பளவு (சதுரமீட்டரில்) |
|---|---|---|---|
| 1 | 1994 | - | 2913.34 |
| 2 | 1998 | - | 8187.37 |
| 3 | 2000 | - | 1191.16 |
| 4 | 2001 | - | 8590.46 |
| 5 | 2005 | - | 7385.71 |
| 6 | 2007 | - | 2226.33 |
| 7 | 2008 | - | 2361.43 |
| | மொத்தம் | - | 32855.80 |

இ) அரசு ஆணை எண் 49 வீட்டுவசதி (மற்றும்) நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 24.03.2003ன்படி மேற்படி புலங்கள் மலைதலயிடமாக 2003ம் ஆண்டில் அறிவிக்கை செய்த பிறகு 2005ம் ஆண்டு முதல் எதன் அடிப்படையில் ஈஷா அறக்கட்டளையினரால் கட்டிடங்கள் கட்டப்படுவதற்கு மலைதல பாதுகாப்பு குழுமத்தின் அனுமதியின்றி சம்பந்தப்பட்ட இக்கரை போளுவாம்பட்டி ஊராட்சியினரால் அனுமதி அளிக்கப்பட்டது என்ற விபரம் அறிய இயலவில்லை.

ஈ) ஈஷா அறக்கட்டளையினரால் தடையின்மை சான்று கோரியுள்ள மேற்படி புலங்களின் மொத்தப்பரப்பான 4,27,700 சதுர மீட்டரில் நடைபாதை, அலங்கார தோட்டம், வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற உபயோகத்திற்காக 3,34,330.86 சதுர மீட்டர் அதாவது மொத்த பரப்பில் 78% இடம் மனுதாரரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் இக்குறிப்பிட்ட 78% பகுதியிலும் அறக்கட்டளையின் தேவைக்கேற்ப சிறிய சிறிய கட்டிடங்கள் அதிகளவில் நாளடைவில் கட்டப்பட வாய்ப்புள்ளது.

உ) 28582.52 சதுர மீட்டரில் புதிய கட்டிடங்கள் கட்ட வனத்துறையின் தடையின்மை சான்று கோரி விண்ணப்பித்த ஈஷா அறக்கட்டளையினர் மலைதல பாதுகாப்பு குழுமத்தின் அனுமதியைப்பெற காத்திராமல் புல எண் 48/2, 53/1A, 53/1B, 86/2, 1079/1A- ல் 28582.52 சதுர மீட்டருக்கு பெருமளவில் கட்டிடங்களை கட்டி வருகின்றனர்.

ஊ) வருவாய் வாரிய நிலை ஆணை (B.S.O) எண் 15-35 (3)ன்படி வன எல்லையிலிருந்து பட்டா நிலங்களுக்கு இடையில் 2 முதல் 3 சங்கிலி வரை இடை தாங்கு மண்டலம் (Buffer Zone) வருவாய்த் துறையினரால் பராமரிக்கப்பட வேண்டும்.

ஆனால், இந்நிகழ்வில் ஈஷா அறக்கட்டளையினர் வன எல்லை ஆரம்பத்திலிருந்து சுற்றுச்சுவர், முன்பக்க நுழைவு வாயிலை அமைத்துள்ளனர்.

மேலும், காபபுக்காட்டின் எல்லையில் இருந்து 1.70 மீட்டர் தொலைவு முதல் 473 மீட்டருக்குள் அனைத்து கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளது மற்றும் கட்டப்பட்டு வரப்படுகிறது.

எ) மேற்படி புலங்கள் அனைத்தும் யானைகள் வழித்தடத்தில் அமைந்துள்ளது. இந்நேர்வில் ஏற்பட்டுள்ள கட்டிடங்களாலும், ஈஷா யோகா மையத்திற்கு வருவோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து யானைகளின் வழித்தடத்தில் அமைந்துள்ள தாணிக்கண்டி மலைவாழ் மக்கள் குடியிருப்புக்கு செல்லும் இணைப்பு வனச்சாலையை ஈஷா யோகா மையத்திற்கு அதிக எண்ணிக்கையில் செல்லும் வாகனங்கள் பயன்படுத்துவதாலும் யானைகளின் வழித்தடம் மறிக்கப்பட்டு இந்நேர்வில் மனித – விலங்கு (யானை) முரணபாடு அதிகளவில் ஏற்படுகின்றது.

ஏ) கட்டிடங்கள் கட்டபபடுவதை நிறுத்தும்படி வனச்சரக அலுவலர் போலாம்பட்டியின ந.க.எண் 950/2011 நாள்: 08.02.2012, 14.04.2012-ல் பலமுறை எச்சரித்தும், ஈஷா யோகா மையத்தினர் கட்டிடங்கள கட்டுவதை நிறுத்துவதில்லை.

ஐ) வறட்சியாக காணப்படும் கோடை மாதங்களான மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் ஈஷா யோகா மையத்தில் நடைபெறும் மகாசிவராத்திரி திருவிழாவுக்கு ஆண்டுதோறும் சுமார் 2.0 லட்சத்திற்கு மேல் வருகைபுரியும் பக்தர்காளல் பயனபடுத்தும் வாகனத்தின் இரைச்சல், திருவிழாவுக்கு பயன்படுத்தும் ஒளி/ஒலி அமைப்பினால் ஈஷா யோகா மையத்திறகு அருகாமையிலுள்ள போலாம்பட்டி பிளாக்-2 ஒதுக்கு வனத்தினுள் வாழும் யானைகளின் இயல்பு வாழ்க்கைக்கு அதிக இடையூறு ஏற்பட்டு யானைகள் வனத்தை விட்டு வெளியேறி அதிக எண்ணிக்கையில் வரும் பக்தர்கள் கூட்டத்தை தாக்க தொடங்கினால், யானைகளினால் ஏற்படும் பெரிய சேதத்தை குறைந்த எண்ணிக்கையிலுள்ள வனப்பணியாளர்களால் தடுப்பது என்பது இயலாத காரியமாகும்.

ஒ) மேற்படி ஈஷா யோகா மையம் போலாம்பட்டி பிளாக்-2 காப்புக் காட்டின் எல்லையிலிருந்து ஆரம்பமாகின்றது. மேலும், மேற்படி புலங்களிலிருந்து சுமார் 65 கி.மீ தொலைவில் ஆனைமலை புலிகள் காப்பகம் அமைந்துள்ளது.

இதற்கான வரைபடம் 1 :50,000 என்ற அளவுள்ள ஒரே வரைபடத்தில குறிக்க இயலாததால் 1:2,50,000 என்ற அளவுள்ள வரைபடத்தில் குறித்து இத்துடன் அனுப்பலாகிறது.

4) இந்நிகழ்வு தொடர்பான கீழ்க்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

அ) சார்பார்ப்புப் பட்டியல்.

ஆ) கிராம கணக்கு `அ' பதிவேட்டின் நகல் மற்றும் பட்டா

இ) ஈஷா அறக்கட்டளையின் 06.07.2011-ம தேதிய கடிதத்தின் நகல்

ஈ)இப்புலங்களையும் அருகாமையிலுள்ள காப்புககாடு மற்றும் ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கும் இடையேயுள்ள இடைவெளியைக் காட்டுவதற்குரிய 1: 50,000 மற்றும் 1: 2,50,000 வரைபடங்கள்

5) இந்நிகழ்வு தொடர்பான புலங்கள் வனத்தை ஒட்டியும், அருகாமையிலுள்ளதாலும், வனம் மற்றும் வன உயிரினங்களுக்கு அதிக தீங்கு ஏற்பட வாய்ப்புள்ளதாலும், விண்ணப்பதாரரது ஈஷா அறக்கட்டளையின் வளாகம் நாளுக்கு நாள் விரிவடைந்தும், பக்தர்களின் எண்ணிக்கை அதிகளவில் கூடியும் வருவதாலும், யானை வழித்தடத்தில் அமைந்துள்ள தாணிகண்டி மலைவாழ் மக்கள் குடியிருப்புக்கு செல்லும் இணைப்பு சாலையில் அதிகளவில் வாகனப் போககுவரத்து ஏற்பட்டு மனித-விலங்கு (யானை) முரண்பாடு ஏற்பட பெருமளவில் வாய்ப்புள்ளதாலும், இந்நேர்வில் மலைதல பாதுகாப்பு குழுமம் அனுமதி அளிக்கக் கூடாது என்பதற்கு வனத்துறையின தடையை தெரிய்படுத்தலாம் என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள
ஒம்/-வே.திருநாவுக்கரசு
மாவட்ட வன அலுவலர்

இணைப்பு:-

நகல் :

வனப்பாதுகாவலர், கோவை வன மண்டலம், கோவை-43க்கு தக்க தகவலுக்காகவும், மேல் நடவடிக்கைக்காகவும் பணிந்தனுப்பபடுகிறது.

/உ.ந.உ.ப

12/10/2012
கண்காணிப்பாளர்

12/10/12

/True Copy/

0422-2456911
e-mail: dfocbe@tn.nic.in

**TAMIL NADU FOREST DEPARTMENT**

From:
Thiru. V. Thirunavukkarasu, I.F.S
District Forest Officer
Coimbatore Division
Coimbatore – 641043

To:
The Principal Chief Conservator of Forests & Head of the Department
Chennai – 600 015
Through
The Conservator of Forests
Coimbatore Zone

**R.C. No. V1/8120/2011 Dated: 17.08.2012**

Sir,

Sub: Hill Area Conservation Authority (HACA) – Coimbatore Forest Division – Coimbatore District – Coimbatore South Taluk – Bolampatti Forest Circle – Ikkarai Boluvampatti Village – Buildings already constructed and under construction by Isha Trust in SF.Nos. 48/2-59, 77/1, 78,84,86,101/3C,1077/1A,A1 and 1079/1A- Seeking NOC to get approval of the HACA – Regarding.

Ref: Na.Ka.No. T.S. 4/31841/2011 Dated 09.07.2011 of the Principal Chief Conservator of Forests, Chennai.

.............

In Coimbatore Forest Division, Coimbatore District, Coimbatore South Taluk, Ikkarai Boluvampatti Village, in the lands under SF.NOs. 48/2-59, 77/1, 78,84,86, 101/3C, 1077/1A, A1 and 1079/1A, covering an area of 42.77 Hectare, the Isha Trust has already constructed buildings with an area of 63,380 Sq.M. and further constructing more buildings for an area of 28,582.52 Sq.M after giving a formal application for the same. The Isha Trust has sought a NOC through their letter Dated 06.07.2011 from the Forest Department to enable them to get approval from the Hill Area Conservation Authority. The area for which the NOC was sought being situated in Ikkarai Boluvampatti village which is within the Hill Area as per G.O. No. 49 Housing (and) Urban Development Department Dated 24.03.2003, as per the regulations of Hill Area Conservation Authority, the proposal has to be sent to the Agency.

3) A field survey was made by the District Forest Officer, Coimbatore on 16.02.2012. Following notes are being submitted in respect of the field survey undertaken.

a) The details of buildings already constructed from 1994 and still under construction in an area of 42.77 Hectares are situated under SF.NOs. 48/1, 48/2, 49, 50/1, 50/2A, 50/2B, 50/2C, 50/2D, 50/3A, 50/3B, 50/3C, 50/3D, 50/4A,50/4B, 51/1, 51/2A, 51/2B, 51/3, 51/4, 51/4B, 51/4C, 52/1A, 52/1B, 52/1C, 52/2A, 52/2B, 52/2C, 53/1A, 5/1B, 54/1, 54/2, 55/1A, 55/1B, 56, 57, 58/2A, 58/2B, 58/3, 59, 77/1, 78/1,78/2A, 78/3, 84,85/1, 85/2, 86/1, 86/2, 101/3C, 1077/1A1A, 1077/8, 1079/1A totaling 52 Survey Numbers are being given as follows:

| Sl.No. | Details of Usage | Year | Area (in Sq. Mtrs.) |
|---|---|---|---|
| 1 | Buildings | 1994 | 2913.34 |
| 2 | Buildings | 1998 | 8604.63 |
| 3 | Buildings | 2000 | 1448.03 |
| 4 | Buildings | 2001 | 8590.46 |
| 5 | Buildings | 2002 | 7589.93 |
| 6 | Buildings | 2005 | 8277.93 |
| 7 | Buildings | 2006 | 212.28 |
| 8 | Buildings | 2007 | 5259.07 |
| 9 | Buildings | 2008 | 6148.83 |
| 10 | Buildings | 2009 | 5478.60 |
| 11 | Buildings | 2010 | 8856.90 |
| 12 | Pond | 2010 | 1406.62 |
| 13 | Buildings under construction | - | 28582.52 |
| 14 | Footpath, Decorated Garden, Stock Area, Parking Area, Play Ground, Arecanut Garden, Theertha Kundam | - | 334330.86 |
| | Grand Total | | 4,27,700.00 |

b) From the year 1994 to 2011 building with an area of 63,880 Sq.Mtrs. and a pong (tank) covering an area of 1406.62 Sq. Mtrs. Were constructed by the Isha Trust. Out of these, the Isha Trust provided information that the following buildings covering an area of 32,855.80 Sq. Mtrs. were constructed with the approval of the panchayat. (copy enclosed herewith). The details are as follows:

| Sl. No. | Year of Construction | Constructed Area (In Square Metres) |
|---|---|---|
| 1 | 1994 | 2913.34 |
| 2 | 1998 | 8187.37 |
| 3 | 2000 | 1191.16 |
| 4 | 2001 | 8590.46 |
| 5 | 2005 | 7385.71 |
| 6 | 2007 | 2226.33 |
| 7 | 2008 | 2361.43 |
| | Grand Total | 32855.80 |

c) As per the G.O. No. 49 of Housing (and) Urban Development Department Dated 24.03.2003, the above lands were declared as Hill Areas in the year 2003, we are unable to obtain the details on what basis the buildings were allowed to be constructed from 2005 without the approval of the Hill Area Conservation Authority and given approval by the Ikkarai Boluvampatti Panchayat.

d) In the total land area of 4,27,700 Sq. Mtrs. for which the NOC was sought by the Isha Trust are situated under the above mentioned survey numbers, a sum of 3.34,330.86 Sq. Mtrs. was set aside for the usage of Footpath, Decorated Garden, Car parking etc. i.e. covering 78% of the total area by the applicant. As such, there is a possibility that small buildings may be constructed in large numbers in this set aside 78% area as per the needs of the Trust over the time.

e) The Isha Trust which sought NOC to construct building with an area of 28582.52 Sq. Mtrs., is currently undertaking construction of buildings in large scale in Survey Nos. 48/2, 53/1A, 53/1B, 86/2, 1079/1A without waiting for the approval from the Hill Area Conservation Authority.

f) As per the Revenue Board Standing Order (BSO) No. 15-35(3), the Revenue Department should have maintained a buffer zone of 2 to 3 chain length between the Forest Limits and the Patta Lands.

However, in this situation, the Isha Trust has constructed compound wall and Front Gate from the beginning of forest limits.

Further, all the buildings already constructed and the buildings under construction are located within a distance of 1.70 mtrs to 473 mtrs. from the Reserve Forest limits.

g) All the above lands are situated in the elephant path. Because of the constructed buildings and the arrival of visitors to the Isha Yoga Centre getting increased every year and large number of vehicles being used for the Isha Yoga Centre utilizing the connecting road leading to Thanikandi Tribal Hamlet, the elephant path get obstructed as a result of this man-animal(elephant) confrontation is happening in a large scale.

h) Though the Forest Range Officer of Bolampatti has given warning on several occasion to stop the construction activities vide R.C. No. 950/2011 Date 08.02.2012 and 14.02.2012, the Isha Yoga Centre has not stopped their construction activities.

i) In the dry summer months of March or April, there are about 2 lakh devotees are visiting Isha Yoga Centre to participate in their Mahasivarathri Festival every year. The vehicle noise and the light and sound decorations during the festival, the normal life of the elephants living at the segregated Bolampatti Block 2 area getting severely affected and if the elephants come out of their area and start attacking the large number of devotees, it will be

simply impossible for the small number of forest guards available in the area to prevent such damage caused by the elephants.

j) The above Isha Yoga Centre begins from the limits of Bolampatti Block 2 reserve forest. It is to be mentioned further that the Anamalai Tiger Reserve Forest is situated at 65 kilo meters from the lands in question.

As the Map for this could not be made in 1: 50,000 scale as a single map, it is being sent as a Map in 1: 2,50,000 scale.

4) Following documents are also being sent herewith in this respect:

a) Verification List

b) Copy of Village Revenue 'A' Register and Patta

c) Copy of the letter dated 06.07.2011 from Isha Trust

d) Maps in the scale of 1: 50,000 and 1: 2,50,000 to identify the distance between the above lands and the Anamalai Tiger Reserve Forest.

5) As the lands in question are situated adjacent and very near to the forest area, as there is a possibility of more damage to the forest as well as animals living in the forest, as the campus of the applicant Isha Trust getting expanded every day, as large number of its devotees are getting congregated in this area, the link road leading to the Thanikandi Tribal hamlet which is also located in the elephant path, the large number of vehicles movement in the said link road, there is more possibility of much more man-animal confrontation, I humbly submit that the forest department may communicate that no approval shall be given by the Hill Area Conservation Authority in this regard.

Yours truly,
Sd/- V. Thirunavukkarasu
District Forest Officer

Encl:
Copy:
Submitted to the Conservator of Forests, Coimbatore Forest Zone, Coimbatore - 43 for proper information and further necessary action.

Sd/- Superintendent